# அருள் ஒளி



ஆவணி~ 2025

இதழ்: 170

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (ஆவணி ~ 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## ஆலயங்கள் அனைத்திலும் நியமம் தவறாத பூஜை வழிபாடுகள் மகோற்சவங்கள் நடைபெற வேண்டும்

**ஆசிரியர் உரை**

இலங்கையில் பல ஆலயங்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற கும்பாபிஷேக கிரியைகள் சரியான முறையில் பேணப்படுவதாக இல்லை. வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுகின்ற பொழுது சில ஆலயங்கள் பாலஸ்தாபனம் செய்து விட்டு கும்பாபிஷேகத்தை காலத்துக்கு காலம் பிற் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் கோயில்களில் நடைபெறும் மகோற்சவங்கள், அலங்கார உற்சவங்கள், விசேட விழாக்கள் யாவும் தடைப்பட்டு போகிறது.

சில ஆலயங்களில் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட நிலையில் ஆலய நிர்வாக குழப்பம், சிவாச்சாரியார் பூசை குழப்பம் காரணமாக கும்பாபிஷேகங்கள் பிற்போடப்பட்டு வருகின்றன. இது நன்மையான விடயம் அல்ல. இதனால் ஆலயம் அமைந்த கிராமத்துக்கும் கூடாது. ஆலய சூழலில் இருக்கின்ற மக்களுக்கும் கூடாது. கோயில்களின் நல்ல முறையிலே பேணுவதற்கு தெய்வ நம்பிக்கையோடு இடையூறு விளைவிக்காமல் நாம் நடந்து கொள்ள

வேண்டும். தங்கள் தங்கள் பிரச்சனைக்காக நீதிமன்றங்களை நாடி கோயில்களின் விழாக்களையும் கோயில்களில் நடைபெற வேண்டிய கட்டட நிர்மாணங்களையும் தடை செய்வதும் பிற்போடுவதும் இன்று சர்வ சாதாரணம் ஆகிவிட்டது.

வடக்கில் பல கோயில்கள் நீதிமன்றத்திற்கு உட்பட்டு வழக்கு நடைபெறுகின்ற காரணத்தினால் கும்பாபிஷேகங்களும் நடைபெறுவதில்லை, மகோற்சவமும் நடைபெறுவதில்லை. கோயிலுக்கு உரியவர்கள் நீதிமன்றங்களில் காத்திருக்கின்றார்கள். இது துன்பத்திற்குரியது. தெய்வ நம்பிக்கை எமக்கு சரியாக இருக்குமேயானால் நாம் தெய்வ சன்னிதானங்களை நீதிமன்றங்களில் கொண்டு போய் விடக்கூடாது. நடக்கின்ற விடயங்கள் எங்களுக்கு பொருந்தாது என்றால் நாம் தெய்வத்திடம் கூறிவிட்டு விலகி விட வேண்டும்.

இதை விடுத்து உரிமை பெறுகின்றோம் எனும் பெயரில் கோயில்கள் பலவற்றில் இன்று கோயில் கடமைகள் பல தடைப்பட்டு கொண்டே போகின்றது. பல பிரசித்தி பெற்ற ஆலயங்களில் கூட கும்பாபிஷே கங்கள் ஒழுங்கு முறையிலே நடைபெறுவதாக இல்லை. இந்நிலை மாற வேண்டும்.

தெய்வங்கள் மீது நாம் கொண்ட நம்பிக்கை வீணாகாது தெய்வத்திடம் நாம் எதுவாக இருந்தாலும் முறையிடலாம். ஆனால் தெய்வ சன்னிதானங்களின் பெயரால் மனித மமதையை காட்டுவதற்கும் அகந்தையை வெளிப்படுத்தவும் ஒரு காலமும் நாம் தெய்வ சன்னிதானங்களை இத்தகைய சூழ்நிலைக்கு பயன்படுத்த கூடாது.

இந்நிலையிலே இலங்கையிலே பல கோயில்கள் சிக்கல்படும் நிலையிலேயே உள்ளன. இந்நிலை மாற வேண்டும். வேற்றுமதத்தவர்களுக்கு இல்லாத அளவுக்கு எமது சமயம் சார்ந்த வழக்குகள் நீதிமன்றங்களிலே தாராளமாக நடைபெறுகின்றன. தன்னுடைய அலுவலகத்தில் நாளும் பொழுதும் கோயில் பிரச்சனைகள் தொடர்பாக வந்து கொண்டே இருக்கிறார்கள் என்று சமீபத்தில் வடக்கு மாகாணத்தின் ஆளுநர் மிகவும் கவலைப்பட்டார். இதே போல் தான் யாழ் மாவட்ட அரசாங்கத்தின் அதிபரும் சமீபத்தில் கருத்து வெளியிட்டார். தினமும் காலையிலே மாவட்ட செயலகத்திற்கு கோயில் பிரச்சினைகள் தொடர்பாக இரண்டு பகுதி மூன்று பகுதியாக வந்து கொண்டே இருக்கின்றார்கள் என

கூறி இருந்தார். இது மிகவும் கவலை வருகின்ற செய்தி.

நாம் வழிபாடு செய்வதற்கும் நல்ல வண்ணம் வாழ்வதற்கும் தெய்வ சன்னிதானங்கள் எமக்கு வேண்டும். அங்கே கோயிலை ஆள வேண்டும் என்றும் நாம் கோயிலை பராமரிக்கின்றோம் என்றும் கூறிக்கொண்டு கோயிலை பூட்டி வைப்பதும், வஞ்சம் தீர்ப்பதும், கோயில்களைக் கொண்டு போய் நீதிமன்றங்களில் விடுவதும் மிகவும் துன்பகரமானது. இந்நிலை மாறுவதற்கு எல்லோரும் சமய மேன்மைகளை கற்றுத் தேர்ந்து மிகவும் பயபக்தியோடு நடக்க வேண்டும். இதுதான் இன்றைய காலத்திற்கு பொருத்தமானது. எம் மூதாதையர்கள் தெய்வங்களுக்கு பயந்து மிகவும் கீழ்ப்பணிந்து தெய்வ வழிபாட்டோடும் தொண்டோடும் நின்று கொண்டார்கள். இன்று அப்படியல்ல. சிறிய சிறிய கோயில்கள் முதல் பென்னம் பெரிய கோயில்கள் வரை கோயில்களை தாம் தாம் ஆள வேண்டும் என்று போட்டி போடுவதனால் எத்தனையோ பிரச்சனைகள் வருகின்றது. இந்நிலையில் இருந்து அனைத்து கோயில்களும் விடுபட வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**ஆசிரியர் ~ அருள்ஒளி**

## கம்பவாரிதி அவர்களுக்கு இயற்றமிழ் அறிஞர் விருது



சென்னை கம்பன் கழகத்தின் பொன்விழா ஆண்டின் சிறப்பு விருதான “இயற்றமிழ் அறிஞர்” விருதினை தமிழக முதலமைச்சரிடம் இருந்து பெற்றுக்கொண்ட கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களுக்கு வாழ்த்துகள். இந்திய அறிஞர்களுக்கு மத்தியில் இவ் விருதினைப்பெறுகின்ற ஒரே ஒரு இலங்கைத் தமிழர் இவர் என்பது சிறப்பிற்குரியது.

# இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட மலையகத்தில், கொட்டகல என்னும் கிராமத்தில் மரத்தின் கீழ் ஓய்வெடுக்கும் கணபதியும் சிவனும் !



# செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம்! கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை.




செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கைத் தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதியான தீர்வு வேண்டும். குழந்தைகள் முதல் எத்தனை அப்பாவிகளைக் கொடூரமாகக் கொலைசெய்து மண்ணுக்குள் புதைத்த கொடிய செயலை யாம் வன்மையாக கண்டிக்கிறோம். இலங்கையில் இரக்கமின்றி தமிழ் மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள் என்பதற்கு செம்மணிப் புதைகுழி முக்கிய ஆதாரமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்தாலும் உறவுகளின் இழப்புகளினால் மிகுந்த கவலையோடு வாழும் உறவினர்களுக்கு செம்மணி விவகாரம் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. செம்மணிப் புதைகுழி ஆராய்ச்சி தொடர்பாக ஈடுபடுகின்ற அனைவருக்கும் இவ்வேளையில் நன்றி கூறுவதோடு நீதியான விசாரணை தொடர்ந்து இடம்பெற வேண்டும். இலங்கையில் உள்ள மனிதாபிமான அமைப்புகள் யாவும் இவ்விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை இவ்விடயத்தில் நேரடியாகப் பங்குகொள்ள வேண்டும். இலங்கை அரசாங்கம் செம்மணி விவகாரம் தொடர்பாக

நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். புதைகுழிகளில் விளையாட்டுப் பொம்மையும் பால் பருக்கும் போத்தலும் பச்சிளம் பாலகர்களின் எலும்புக் கூடுகளோடு உலகுக்குச் சொல்லும் செய்தியைச் சகலரும் உணர வேண்டும்.

காலம் கடந்தாலும் இயற்கை, இறைவன் , புதைகுழிகள் ஊடாக உண்மையை வெளிப்படுத்தியுள்ளமை "தர்மம் தோற்காது" என்ற நம்பிக்கையைத் தருகிறது. கட்சி பேதமின்றி தமிழர்கள் ஒன்றுபட்டு இவ்விவகாரத்துக்கு நீதி கிடைக்க முயற்சி செய்ய வேண்டும் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## என்றும் நினைவில் நிற்கும் நல்லூர் மணல் சிற்பம்



நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா ஆரம்பித்தால் நினைவுக்கு வருவது கோவில் வெளிப்பிரகார மணலில் அமரரான வித்தியா வடிவமைந்த நல்லூர் கந்தனின் கோபுரம் தான். அன்றைய நாட்களில் பிரபலமாக பேசப்பட்ட மணல் சிற்பம். யாழ்.பல்கலைக்கழக மாணவி அமரத்துவமடைந்த வித்தியாவின் (அம்மு ) கைவண்ணத்தில் (2013இல்) உருப்பெற்ற நல்லூர் கந்தனின் அழகிய கோபுரம்.

# மகத்துவமான குருத்துவப் பணி புரியும் ஆசிரியர் குணசீலன் யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்



யாழ்ப்பாணம் மாநகரசபை சைவசமய விவகாரக் குழு நல்லூர் மஹோற்சவ காலத்தில் வெளியிடுகின்ற நல்லைக்குமரன் மலர் - 2025 வெளியீட்டு விழாவும் யாழ்.விருது வழங்கும் நிகழ்வும் இன்று 06.08.2025 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாநகர ஆணையாளர் ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி வி.மதிவதனியும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கை.சிவகரனும் கலந்து கொண்டனர்.

ஆசியுரையினை சிவசிறி சபா.வாசுதேவக்குருக்கள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தினர்.



நூல் வெளியீட்டுரையை கோ. கோகுலறதனும், ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதனும் நிகழ்த்தினர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டு தோறும் வழங்கி வரும் உயரிய யாழ் விருதை உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தமை சமூக மட்டத்தில்



பெரும் மகிழ்வையும் நிறைவையும் ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் பணி செய்கின்ற மேன்மையாளர்களைக் கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாண மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டு தோறும் யாழ் விருதை வழங்கி கௌரவித்து வருகிறது.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான விருது, உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு வழங்குவதென யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஏகமனதாக தீர்மானித்து அதனை இன்றைய தினம் வழங்கியுள்ளது.

சைவ சமய விவகாரக் குழு சமய, சமூக, மருத்துவப் பணிகளுக்காக புலமை சார்ந்தவர்களுக்கு ஏலவே யாழ் விருதை வழங்கியிருந்தாலும் கல்வித்துறையை சிறப்பித்து வழங்கப்பட்ட முதலாவது யாழ் விருது இதுவென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நம் மண்ணில் இருந்து மாணவர்களின் கல்விக்காக மிக நீண்ட காலம் பெரும் பணியாற்றி வரும் உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்கள் வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி - சிவகாமி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தனது தாயார் கற்பித்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் இடை நிலை, உயர்தரக் கல்வியையும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் திற்குத் தெரிவானார்.



விஞ்ஞானப் பட்டப் படிப்பை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நிறைவு செய்த அவர் பருத்தித்துறை மெதடிஸ்த மிசன் உயர்தரப் பெண்கள் பாடசாலையில் ஆசிரியராக சிறிது காலம் பணியாற்றினார்.



பின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞானத்துறை விரிவுரையாளராகப் பதவியேற்றார். அதேவேளை உயிரியல் பாடத்தை தனியார் கல்வி நிறுவனங்கள் மூலம் மாணவர்களுக்குக் கற்பித்தார்.

ஆசான் குணசீலன் அவர்கள் எங்கள் மருத்துவ பீட மாணவர்களையும் விஞ்ஞானத்துறை மாணவர்களையும் உருவாக்கிய சிற்பி. மாணவர்களின் நன்மதிப்பிற்குரிய அவர், அப்பளுக்கற்ற ஆசான். ஆசிரியத்துவம் எப்படியாக இருக்க வேண்டும் என்பதற்கான அடையாளம் அவர். இன்று, நம் மத்தியிலும் புலம்பெயர் நாடுகளிலும் இருக்கக்கூடிய மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானத் துறை சார்ந்தவர்கள் ஆசான் குணசீலனின் மாணவர்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

நம் மண்ணில் போர் மேகம் சூழ்ந்த போதிலும் ஆசான் குணசீலன் அவர்கள் எங்கள் மாணவர்களின் கல்விக்காக இம் மண்ணில் இருந்து ஆற்றிய பெரும்பணியை மறந்து விடமுடியாது. அவரின் கல்விப் பணி எங்கள் பெரும் சொத்தாகிய கல்விக்கு எந்தக் குந்தகமும் ஏற்படாமல் பாதுகாத்தது என்பதை நம் தமிழ்ச் சமூகம் ஒருபோதும் மறந்துவிடாது.



மாணவர்கள் மீது அளவு கடந்த அன்பு கொண்ட அவர் மாணவர்களின் குடும்ப நிலைகளைக் கருத்தில் கொண்டு உதவி தேவைப்பட்ட அத்துணை மாணவர்களும் உயர் கல்வி கற்பதற்குப் பேருதவி புரிந்தவர். கற்பிக்கும் ஆற்றல், பண்புடமை,கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்கொண்ட பார்வை என்ற உயரிய விழுமியங்களைத் தன் வாழ்வின் அணிகலனாகக் கொண்டவர். அவரிடம் கற்றுப் புலம் பெயர் நாடுகளில்

உள்ள மாணவர்கள் அவரை அங்கு வரவழைத்து தங்கள் குருவுக்கு கௌரவம் செய்தனரெனில், அவர் மீது மாணவர்கள் கொண்டிருந்த பற்றும் பாசமும் எத்துணை உயர்வானதென்பதை நாம் உணர முடியும். 2017, 2018, 2019 ஆண்டுகளில் கனடா, இலண்டன், அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து அவருக்கு விழா எடுத்து அவரது மாணவர்கள் மகிழ்ந்தனர்.

இதற்கும் மேலாக, வடமராட்சி பிரதேச மருத்துவர்கள் நிதிப்பங்களிப்புடன் வைத்தியசாலையில் அமைக்கப் பட்ட வைத்தியர்களின் ஓய்வு அறை மற்றும் ஊழியர்களின் சிற்றூ ண்டிச்சாலைக் கட்டடத்திற்கான அடிக்கல்லை தங்கள் உயிரியல் ஆசான்களான திரு.சி.குணசீலன், திரு.த.தம்பிராசா ஆகியவர்கள் மூலம் நாட்டிவித்ததுடன் அந்தக் கட்டடத்தினை அவர்கள் மூலம் திறந்து வைத்து அதனைக் கல்லில் பொறித்துக் கட்டடத்தில் பதித்து பெருமையடைந்தனர்.

இவ்வாறாக தனது வாழ்வை குணசீலன் மாணவர் சமூகத்திற்கு அர்ப்பணித்த ஆசான் குணசீலன் அவர்களின் கல்விப்பணி, சமூகப்பணி மற்றும் ஆசிரியத்துவம் ஆகியவற்றிற்கு கௌரவம் அளிக்கும் அங்கீகாரமாக அமையும் யாழ் விருது அவரின் கரங்களில் சேர்ந்ததால் அவ் விருது மேலும் பெருமை பெற்றது.



# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சிறப்புற நடைபெற்ற ஆடிப்பூர உற்சவம்







ஆடிப்பூரம் என்பது ஆடி மாதத்தில் வருகின்ற சிறப்பு மிக்க அம்பாளுக்குரிய விசேட தினம் ஆகும். அம்பாள் உலகைப் படைத்த நாளாக கருதப்படும் ஆடிப்பூர நன்நாளில் எமது தெல்லிப்பழை துர்காதேவி தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று அழகிய சிறிய சித்திர தேரில் உள்வீதி வலம் வந்த அம்பாளை பெருமளவான பக்தர்கள் வழிபட்டு வணங்கினர்.








# சிவபெருமான் குடியிருக்கும் வில்வ மரம்

சிவ தலங்களில் வில்வத்திற்கு மிகவும் மகிமை உண்டு. லிங்கம் தொடர்பானதில் பூஜிக்க மிக உகந்தது இந்த வில்வ இலைகள் ஆகும். இந்த வில்வ இலைகள் கிடைப்பதற்காக அனேகமாக சிவன் கோவில்களில் எல்லாம் வில்வ மரம் வளர்க்கப்படும். வில்வம் குளிர்ச்சியூட்டும் குணமுடையது. அதாவது இதை உண்டால் உடலாகிய பஞ்ச பூதம் வெகு எளிதில் அதிக சக்தியை செலவழிக்காமல் ஜீரணம் செய்த சக்தியும் சேமிப்பாகும்.

சிவத்துக்குள் சக்தியை அதிகம் சேமிக்க செய்யும் ஒரு மூலிகையாக இது இருப்பதால் இது ஈசார்சனைக்குமிக உகந்ததாகும். இதனை "சிவமூலிகைகளின் சிகரம்" எனவும் அழைப்பர்.இந்த இலைகளை கொண்டு ஈசனை பூஜிப்பதால் சகல பாவங்களும் நீங்கும் இந்த வில்வ மரத்தினை வளர்ப்பதால் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும். ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலன் கிடைக்கும். புண்ணிய நீர் ஆடிய பலன் கிடைக்கும்.காசி முதல் இராமேஸ்வரம் வரை உள்ள சிவ தல தரிசனப் பலன் கிடைக்கும்

வில்வ மரத்தில் அபார மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. வில்வ காயை பறித்து பார்த்தால், உருண்டையாகவும் ஓடு

கடினமாகவும் வெளிர் மஞ்சள் நிறத்தையும் கொண்டது. இதன் பழமானது குடற் கோளாறுகளை நீக்கவும்இமலக்கட்டை நீக்கி உடல் சூட்டை தணிக்கும் தன்மை கொண்டது.வில்வ இலை கசாயம் பருக கைகால் பிடிப்பு, உடல் வலி முதலியவை குறையும் மேலும் இந்த கசாயமானது கபம், மூச்சுத் திணறல், பித்தம் போன்றவையை குணமாக்கும். அது போல இலையை தண்ணீரில் கொதிக்க வைத்து வீக்கம் உள்ள உடல் பகுதியில் ஊற்றினால் அவை குறைந்து விடும்.

இரத்த அழுத்த நோய் கட்டுப்பாட்டிற்குள் வரும், சர்க்கரை நோயும் சீர்படுத்தப்படும், அல்சர் அணுவும் அணுகாது, ஜீரணக்கோளாறுகள் ஏற்படாது, உடல் குளிர்ச்சியாக இருக்கும், தோல் மீது பூசிவர தோல் அரிப்பு குணப்படுத்தப்படும். வில்வ வேர் கஷாயம் பருக அது நாடி நரம்புகளில் ஏற்படும் அதிர்வை போக்கி சாந்தமடையும் செய்யும் தன்மை கொண்டதாகும். ப்ரோட்டின், கொழுப்பு, கால்சியம் இபாஸ்பரஸ் இரும்பு, உலோகச்சத்து, மாசத்து, கலோரி போன்றவை ஆப்பிள், மாதுளை போன்ற பழங்களில் இருப்பதை விட வில்வ பழத்தில் அதிகமாக உள்ளது என்பது வியக்க தக்கதே. ஆரோக்கியத்திற்கு அரணாகவும், ஆன்மீகத்தில் முக்கிய இடம் பெற்றும் இருப்பதுமான வில்வமரத்தை புனிதமாகப் பேணி நன்மைகள் பலவும் பெறுவோமாக..

## முன்னாள் வேந்தருக்கு சாகித்திய சக்கரவர்த்தி விருது



யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தருக்கு சாகித்திய சக்கரவர்த்தி விருது. யாழ்.பல்கலைக்கழக முன்னாள் வேந்தரும் பேராதனைப் பல்கலைகழக தகைசார் பேராசிரியரும் தென்னாசியாவின் புகழ் பூத்த வரலாற்று பேரறிஞருமான கலாநிதி எஸ்.பத்மநாதன் அவர்களுக்கு “சாகித்திய சக்கர வர்த்தி” விருதை பேராதனைப் பல்கலைக்கழகம் வழங்கி கௌரவித்தது.

தான் பெற்ற கல்வியால் சமுகத்தில் பல்வேறு பணிகளை ஆற்றிய பெருமகனாருக்கு இவ் விருது கிடைத்தமை வரவேற்கத் தக்க விடயம்

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



எமது தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாக சபை உறுப்பினர் திரு உமாசுதன் அவர்களுடைய பாசமிகு மனைவியார் அமரர் திருமதி. கணேசலட்சுமி (கணா மிஸ் – ஓய்வுபெற்ற வரலாற்றுப் பாட ஆசிரியை, தி/சென்ட் மேரீஸ் வித்தியாலயம், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) 26-07-2025 சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதோடு அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்து கொள்கிறோம்.

## இதய அஞ்சலி



லண்டன் சைவமுன்நேற்றச் சங்கத்தின் காவலர் வழக்கறிஞர் கு.சிதம்பரப்பிள்ளை ஐயா அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த கவலை அடைகிறோம். புலம்பெயர்ந்த தேசத்தில் சைவ சமயத்திற்காக ஐயா அவர்கள் ஆற்றிய பணிகள் என்றும் மனங்களில் மறையாமல் இருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும்.

# சப்பரம்!

சப்பரமா, சப்பை ரதமா,
எதுதான் சரி என்று தேடல்.
மதுரைத் தமிழ்ப் பேரகராதி,
”சப்பரம்” என்றே சொல்ல,
சந்தேக மேகம் விலகுதடி.

சப்பரம் என்பது வெறுமனே இல்லை,
அதுவொரு பெரிய இருக்கை,
மரியாதையின் அடையாளம்.
யானை மீதேறும் விசாலப் பலகை,
ராஜ கம்பீரம் அதில் குடியிருக்கும்.

சமதளப் பரப்புள்ள தூக்குப் பலகை,
ஊர்வலங்கள் தனிலே மிளிரும்,
தெய்வங்கள் வீற்றிருக்க,
மக்கள் மனம் குளிர்ந்து வணங்க,
பாரம்பரியத்தின் பிணைப்பாய் அது.

சொற்களின் ஆழம் தேடுகையில்,
பொருள் பல வெளிப்படும்,
தெளிவு வந்து சேரும்.
”சப்பரம்” எனும் சொல்லை,
உள்ளத்தால் நாம் ஏற்போம்.

பாஞ்சாலன்.



# நல்லூரான் அருள்பெற்ற அருட்பெரும் பெண்சித்தர் சடையம்மா




ஈழத்து சித்தர்கள் என்றாலே பல சுவாமிகள்தான் எங்கள் நினைவுக்கு வருவார்கள். ஆனால் ஈழத்து சித்தர் மரபிலே சுவாமினிகளும் இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஈழத்து முதாலாவது பெண் சித்தராக அடையாளப்படுத்தப்படுபவர் அன்புக்கும் வழிபாட்டுக்குமுரிய சடையம்மா அவர்கள். ஆன்மீக வழி அன்பர்களுக்கு அவர் பெண்சித்தராக இருந்தாலும் அனைத்து பெண்களுக்கும் ஒரு முன்னோடியான ஆளுமைமிக்க தமிழ் பெண்ணாக வாழ்ந்தவர் என்பது சடையம்மாவினுடைய ஆராயப்படவேண்டிய இன்னொரு பக்கமாக இருக்கிறது.

1865.08.19 (ஆவணி ரோகினி) நன்னாளில் வீரகத்திப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகளாக திருநெல்வேலி கிழக்கில் அவதரித்தார். முத்துப்பிள்ளை எனும் பிள்ளைத்திருநாமம் சூட்டி மகிழ்ந்த பெற்றோர் குழந்தைக்கு 11 வயதாகும்போது கதிரேசனார் என்பவரை திருமணம் செய்து வைத்தனர். ஒருமுறை கணவன் நோய்வாய்ப்படவே நல்லூர்கந்தப் பெருமான் கனவில் தோன்றி அம்மையாரை வழிப்படுத்தவே, முருகன் கட்டளைப்படி வைரவப்பெருமான் சந்நிதிக்கு கணவனை அழைத்துவந்து 40 நாட்கள் அங்கு தங்கியிருந்து முருகனை வழிபட்டு இருக்கிறார். ஒருமுறை இவர் கடையிற்சுவாமிகளை சந்திக்க புறப்பட்ட வேளை அவரே நேரில் வந்து” கந்தனை மறவாது வந்தனை செய் அவரே நம் சொந்தம்” என்று ஆசிகூறி சென்ற பின்னர் கணவனும் குணமாகியிருக்கிறார். அதன் பின்னரும் இவர் நல்லூர்கந்தனிற்கு தொடர்ந்து பணிகள் புரிந்து வந்திருக்கிறார்.

இரண்டு பெண்குழந்தைகளுக்குத் தாயாகி இல்லறத்தில் இருந்துகொண்டே தன்னைத் தன்னால் அறிந்துகொண்ட


அம்மையார் இல்லறவாழ்வு நீங்கி கணவனிடம் விடைபெற்று துறவற வாழ்க்கைக்குத் தலைப்பட்டார். அவ்வாறாக அவர் துறவற வாழ்வை ஆரம்பித்த இடம் தற்போது நல்லூர் தேர்முட்டியின் முன்னால் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடம் என்று அழைக்கப்படும் இடமாகும். அது முன்னர் சடையம்மா மடம் என்றே அழைக்கப்பட்டது. அம்மையார் தான் வாழ்ந்த காலத்தில் 63 நாயன்மார்களின் குருபூசைகளையும் தவறாது பூஜித்து அன்னதான பணிகளையும் செய்துவந்தார் என்பது குறிப்படத்தக்கது.



ஈழத்து ஆன்மீக சாதனையாளர்களை பொறுத்த வகையில் கதிர்காமம் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாக இருக்கிறது. யோகர் சுவாமிக்கும் செல்லப்பா சுவாமிகள் அடிக்கடி கதிர்காமம் போ என்று பணித்தது மட்டுமல்லாது ஈழத்து சித்தர்கள் எல்லோரும் ஏதோ ஒருவகையில் கதிர்மத்தோடு சம்பந்தப்படுகிறார்கள். அதற்கு காரணம் போகர் சித்தர் கொடுத்த சக்திமிக்க இயந்திரதகடு ஆன்மீக சாதனையாளர்களுக்கு குண்டலினி சக்தியை சகஸ்ரத்திற்கு கொண்டுபோவதற்கான இயைபான சூழலை உருவாக்குவதாக இருக்கலாம். சடையம்மா அவர்களும் அடிக்கடி கதிர்காமம் யாத்திரை செய்தது மட்டுமல்லாமல் கதிர்காமத்திலும் சடையம்மா மடம் ஒன்றையும் நிறுவியிருந்தார்.

குண்டலினி சக்தியை பற்றிகதைக்கும்போதுதான் அதற்கு ஆதாரமான வாலை வழிபாடு ஞாபகம் வருகிறது. சித்தர்கள் அனைவருமே பெரும்பாலும் முருகன் வழிபாடு (குண்டலியாம் சிவ குகன் தினம்வருக) மற்றும் வாலை வழிபாட்டுடன் சம்பந்தம் பெறுகிறார்கள். (முக்கோண வட்ட கிணற்றுக்குள்ளே மூல மண்டல வாசிப்பழக்கத்திலே அக்கோண வட்டச் சக்கரத் திக்வாலை அமர்ந்திருக்கிறாள் வாலைப்பெண்ணே என்று கொங்கண சித்தர் குறிப்பிடுகிறார்.)

அந்தவகையில் திருநெல்வேலியில் தற்போது புதிதாக குடமுழுக்கு நடந்த வாலை அம்மன் கோயிலுக்கும் சடையம்மாவுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அங்கு அவர் தியானநிலையில் இருந்து வாலையம்மனின் அருட்பார்வை கிட்டியது. இன்று அக்கோயிலின்



யாழ்ப்பாணம் நகுலேஸ்வரத்திலுள்ள
சடையம்மா சமாதியும் பிரதிஸ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களும்

யாகசாலையின் மேற்புரம் சடையம்மாவின் திருவுருவத்தை எழுந்தருளச்செய்துள்ளார்கள். அநேக ரிசிகள் முனிவர்களுக்கு யோகநிலையில் குண்டலினி சக்தியை உச்சிக்கு கொண்டுவருவதால் அவர்களுக்கு அபரிமிதமான தலைமுடி வளர்ச்சி இருக்குமாம். அந்த வகையில் முத்துப்பிள்ளையும் யோகநிலை கைகூடவே அவரது சடாமுடியும் நீண்டுவளர்ந்து நிலத்தை தழுவியது. அதன் காரணத்தாலேயே சடையம்மா என்ற காரணப்பெயரும் அவருக்கு வந்தது.

சடையம்மா யோகநிஷ்டையில் அவர் சக்தியை உச்சந்தலைக்கு கொண்டுவரும்போது அவர் தலைவீங்குவதையும் பின்னர் சாதாரணநிலை திரும்பும்போது வீக்கம் குறைவதையும் பக்தர்கள் அவதானித்து பதிவுசெய்திருக்கிறார்கள்.

சடையம்மா ஈழத்தில் மட்டுமல்லாது திருசெந்தூரிலும் மடம் அமைத்து பல்வேறு சமய சமூகப்பணிகளை ஆற்றியிருக்கிறார் என்பது அவரது ஆளுமையைக் காட்டுகிறது. தற்போது அந்த திருசெந்தூர் மடம் மட்டுமே அவரது பெயரில் இன்றுவரை இயங்கி பெண்களின் வாழ்வாதரத்தை உயர்த்தும் பணிகளை செய்துவருகிறது.

சடையம்மா தன்னுடைய இறுதிகாலத்தில் மாருதப்புரவள்ளிக்கு வரமருளிய ஈசனின் இடத்தில் (கீரிமலையில் மாருதப்புரவள்ளி தவம் செய்த குன்றிற்கு அருகில்) ஒருமடம் அமைத்து மக்களுக்கான தன் பணிகளைச் செய்து தனக்கான ஆன்மீக சாதனைகளையும் செய்து ஆடி அனுசம் நன்னாளில் 05.08.1936 சமாதியடைந்தார். யோகர்சுவாமி தலைமையில் அம்மையாருக்கு சமாதி வைக்கப்பட்து.

யாழ்பாணம் நல்லூரில், கதிர்காமத்தில், திருச்செந்தூ ரில், கீரி மலையில் என்று மடங்களை அமைத்து தனியொரு

பெண்ணாக ஈழத்து மக்களுக்கு பல பணிகளையாற்றிய சடையம்மா ஆண் பெண் என்ற எந்த பேதமும் இன்றி அனைவருக்கும் ஆத்மலாபம் கிட்டும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம்.



"கந்தனை மறவாது வந்தனை செய் அவரே நம் செந்தம்" என்று கடையிற்சுவாமிகள் சடையம்மாக்கு அருளிய உபதேசம் எங்கள் எல்லோருக்குமானது. செல்லப்பர்,யோகர் சடையம்மாவுக்கு மட்டுமல்ல நல்லூரான் எங்கள் எல்லோருக்கும் சொந்தமாவான். சடையம்மாவை எமக்களித்த நல்லூர் கந்தனை வந்தனைசெய்வோம்.



# நல்லூர் கந்தசுவாமி கோயில் 2025 மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது











யாழ்ப்பாணம், நல்லூர் – வட இலங்கையின் புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் 2025, பாரம்பரியத்தின்படி கொடியேற்றத்துடன் கடந்த வாரம் சிறப்பாக தொடங்கியது. பக்தர்கள் ஆரவாரத்துடன் கலந்து கொண்டு, திருவிழாவின் ஆரம்பத்தைச் சாட்சி செய்தனர்.



மகோற்சவத்தின் போது தினமும் பல்வேறு வாகன ஊர்வலங்கள் நடைபெற்று வருகின்றன. வெள்ளி வாகனங்கள், சிங்க வாகனம், அன்னம் வாகனம் உள்ளிட்ட பாரம்பரிய வாகனங்கள் பக்தர்களை கவர்ந்துள்ளன. தேர் திருவிழா மகோற்சவத்தின் உச்சமாக நடைபெறவுள்ளது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ள உள்ளனர். பக்தி, பாரம்பரியம், பண்பாட்டு அழகுகள் ஒருங்கிணையும் நல்லூர் மகோற்சவம், யாழ்ப்பாணத்தின் ஆன்மீகச் செல்வமாகவும், உலகத் தமிழர்களின் பெருமையாகவும் தொடர்ந்து விளங்குகிறது.










# ஆடிப்பெருக்கு பற்றி புராணம் சொல்லும் கதை

ஆடிப்பெருக்கு என்பது ஆடி மாதம் 18ஆம் நாள் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதை குறிக்கும். இதனை பதினெட்டாம் பெருக்கு என்றும் கூறுவார்கள். நதியை பெண்ணாக வணங்கும் நாள். அந்தவகையில் ஞாயிறு 03.08.2025 அன்று ஆடிப் பெருக்கு கொண்டாடப்பட்டது.

புராணங்களில் கூறப்படும் ஆடி 18 என்பது மகாபாரதத்தில் நடைபெற்ற குருச்ஷேத்திரப் போரின் இறுதி நாளான 18 வது நாளை குறிக்கிறது. குருச்ஷேத்திரப் போரின் முதல் நாள், பாண்டவர் படைகள் அபிமன்யுவால் காக்கப்பட்டும், பீஷ்மரின் அம்புகளால் பலத்த சேதமடைந்தது. உத்தரனும், சுவேதனும், சல்லியனாலும், பீஷ்மராலும் கொல்லப்பட்டனர்.

பாண்டவர் படைகள் முதல் நாள் போரில் படுதோல்வி அடைந்ததை சரிகட்ட, பீஷ்மரைக் கொல்ல அணி வகுத்தனர். ஆனால் கௌரவர் படைகள் பீஷ்மரைக் காத்து நின்று போரிட்டது. பீஷ்மரைக் கொல்ல சிகண்டியைப் போர்க் களத்தில் பீஷ்மருக்கு எதிராக நிறுத்திப் போரிட கிருஷ்ணர் ஆலோசனை கூறினார். கிருஷ்ணரின் ஆலோசனையின் படி சிகண்டியை பீஷ்மருக்கு எதிராகப் போரிட போர்க்களத்திற்கு அனுப்பினர்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, சிகண்டியின் பின் இருந்து அர்ஜுனன் தனது அம்புமழையால் பீஷ்மரின் உடலை சல்லடையாக துளைத்தெடுத்து, அம்புப்படுக்கையில் கிடத்தினான். இப்படி தொடர்ந்து 15 நாள் போர் நடக்க ஒவ்வொருவராக போரில் இறந்து கொண்டே வந்தனர்.


16ஆம் நாள் போரில் கௌரவர்களின் தலைமைப் படைத்தலைவராக கர்ணன் நியமிக்கப்பட்டான். கர்ணனின் தேரை சல்லியன் ஓட்டினார். கர்ணன் போரில் இலட்சக்கணக்கான பாண்டவப் படைகளைக் கொன்றான். அர்ஜுனன் தனது கூர்மையான அம்புகளால் கர்ணனின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தினான்.கர்ணன், தருமரையும் சகாதேவனையும் போரில் வென்றாலும், தன் தாய் குந்திக்கு வழங்கிய வரத்தின்படி, கொல்லாமல் விட்டு விட்டான்.

ஆயிரக்கணக்கான பாண்டவப் படைகளைத் தனது கூரிய அம்புகளால் கொன்று பின் அர்ஜுனனைக் கொல்ல அம்பு மழை பொழிந்து கடுமையாக போரிட்டான். அஒரு நேரத்தில், கர்ணன் அர்ஜுனனை கொல்ல, அர்ஜுனனின் கழுத்துக்கு குறி வைத்து நாகபாணத்தை ஏவினான். அப்போது பகவான் கிருஷ்ணர், அர்ஜு னனின் தேரை ஒரு அடி கீழே அழுத்தினார்.

அர்ஜுனனின் தேர் பூமிக்குக்கீழ் ஒரு அடி இறங்கியது. அதனால் கர்ணன் ஏவிய நாகபாணம், அர்ஜுனனின் கழுத்தை தாக்காது, அவனின் தலைக்கவசத்தை தாக்கியதால், அர்ஜுனனின் தலைக்கவசம் மட்டுமே கீழே விழுந்தது. கிருஷ்ணரின் போர் தந்திரத்தால் அர்ஜுனன் உயிர் பிழைத்தான்.

குருச்ஷேத்திரப் போரின் இறுதியில் கர்ணனின் தேர்ச்சக்கரம் சகதியில் மாட்டிக் கொண்டது. கர்ணன் தேரைச் சகதியில் இருந்து மீட்கும் நேரத்தில், கிருஷ்ணர் அர்ஜுனனை கர்ணனின் மீது அம்புகள் ஏவச் சொன்னார். இந்திரன், கர்ணனின் கவச குண்டலங்களை தானமாகப் பெற்றுக் கொண்டபடியால், தெய்வீகக் கவசம் இல்லாத கர்ணனின் மீது செலுத்தப்பட்ட அர்ஜுனனின் கூரிய அம்புகள் கர்ணனின் நெஞ்சைச் சல்லடையாக துளைத்தன. அதனால் கர்ணன் போரில் மடிந்தான். அதர்மம் அழிக்கப்பட்டு, தர்மம் நிலைநாட் டப்பட்ட இந்த நாள் தான் பதினெட்டாம் போர் என்று அழைக்கப்படும் ஆடி 18 ஆம் நாளாகும்.

# அர்த்தநாரீஸ்வரருக்கென்று தனிக் கோயில்




தென்னிந்தியாவில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் அமைந்துள்ளது அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில். திருச்செங்கோட்டில் இருந்து நடந்து செல்லும் தொலைவில் இந்தக் கோயில் உள்ளது. அர்த்தநாரீஸ்வரர், மாதொருபாகர் என அழைக்கப்படும் இத்தல மூலவர் சுமார் ஆறு அடி உயரத்தில் சரிபாதி ஆணாகவும், பெண்ணாகவும் மேற்கு நோக்கி வெள்ளை பா'ாணத்தால் ஆன சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கிறார். சிரசில் ஜடாமகுடம் விளங்க, பூர்ண சந்திரனை சூடி, கழுத்தில் ருத்ராட்சம், தாலி அணிந்து, கையில் தண்டாயுதம் ஏந்திக் காட்சி தருகிறார். அம்பிகையின் அம்சமாக விளங்கும் இடது பாக காலில் கொலுசு உள்ளது. சிவன், சக்தி சேர்ந்த வடிவம் என்பதால் வலதுபுறம் வேட்டியும், இடது புறம் சேலையும் அணிந்து அருள் பாலிக்கிறார்.

மூலவரின் காலடியில் இருக்கும் தேவ தீர்த்தம், எக்காலத்திலும் வற்றாமல் சுரந்து கொண்டே இருக்கிறது. அர்த்தநாரீஸ்வரரை தரிசிக்க வருபவர்களுக்கு இந்தத் தீர்த்தமே பிரசாதமாக வழங்கப்படுகிறது.

திருச்செங்கோட்டில் அமைந்துள்ள மலை வடமேற்கில் இருந்து பார்க்கும்போது பசுவின் தோற்றத்துடனும், மேற்கு பகுதியில் இருந்து பார்க்கும்போது ஆண் உருவம் படுத்து இருப்பது போலவும், தென்மேற்கு பகுதியில் இருந்து பார்க்கும்போது பெண் படுத்திருப்பது போன்ற தோற்றத்துடனும் அமைந்துள்ளது சிறப்பு.

இந்தக் கோயிலில் மார்கழி மாதம் மட்டும் பிருங்கி முனிவர் வழிபட்ட மரகத லிங்கத்தை வைத்து வழிபடப்படுகிறது. மற்ற மாதங்களில் அதற்குப் பதிலாக வேறு ஒரு லிங்கம் வைத்து வழிபடுகிறார்கள். இந்த லிங்கத்தை பார்க்க வேண்டும் என்றால் குறைந்தது அதிகாலை 5 மணிக்குள் கோயிலில் இருக்க வேண்டும்.


அறுபது அடி நீளத்தில் ஐந்து தலை நாகத்தின் சிலை ஒன்று கோயில்




படிக்கட்டு அருகில் அமைந்துள்ளது. இது ஒரு சிவத்தலமாக இருப்பினும், முருகப்பெருமானுக்கும் மிக உகந்ததாக விளங்குகிறது. இத்தல முருகன், செங்கோட்டு வேலவர் என்ற திருநாமத்தில் தனிச்சன்னிதியில் அருள்பாலிக்கிறார். சிவனும், சக்தியும் இணைந்த மிகவும் பிரசித்தி பெற்ற கோயில்களில் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலும் ஒன்றாகும்.

இத்தலம் சுமார் 1901 அடி உயரம் கொண்டது. அர்த்தநாரீஸ்வரரை தரிசிக்க சுமார் 1200 படிகள் ஏறிச் செல்ல வேண்டும். இந்த மலையில் ஸ்ரீதேவி, பூதேவியருடன் ஆதிகேசவப்பெருமாளும் தனிச்சன்னிதியில் அருள் பாலிக்கிறார்.

கணவன்-மனைவி ஒற்றுமையுடன் வாழ, இங்கே கேதார கௌரி விரதம், புரட்டாசி வளர்பிறை அஷ்டமி திதியில் ஆரம்பித்து 21 நாட்கள் கடைபிடிக்கப்படுவது சிறப்பம்சமாகும். இது தவிர, நாக தோஷம், ராகு தோஷம், கால சர்ப்ப தோஷம், களத்திர தோஷம் போன்றவற்றுக்காகவும் பிரார்த்தனை செய்யப்படுகிறது. இம்மலையை பௌர்ணமி நாட்களில் வலம் வந்தால் கயிலாயத்தையும், வைகுண்டத்தையும் வலம் வந்த புண்ணியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், மாசி மகம் மற்றும் பங்குனி உத்திரம் ஆகியவை இக்கோயிலில் மிக விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறியதும் சுவாமி மற்றும் அம்பாளுக்கு அபிஷேகம் செய்தும், வஸ்திரம் சாத்தியும் நேர்த்திக்கடன் செலுத்தப்படுகிறது.






# வரம் தரும் வரலட்சுமி விரதம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அதிசிறப்பாக நடைபெற்றது




தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் 08.08.2025 அன்று வரலட்சுமி விரத உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. வரலட்சுமி விரதம் அஷ்ட ஐஸ்வர்யம் கிடைக்கவும் வேண்டி சுமங்கலிப் பெண்கள் இந்த விரதத்தை கடைபிடிப்பது மிக நல்லது. வரலட்சுமி விரதத்தன்று வரலட்சுமி தாயாரை மனதால் வேண்டினால், ஆதி லட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, வித்யா லட்சுமி, வீர லட்சுமி, கஜ லட்சுமி, சந்தான லட்சுமி, விஜய லட்சுமி ஆகிய அஷ்டலட்சுமிகளையும் வேண்டிய பலன் ஒரு சேரக் கிடைக்கும். இவர்கள் அனைவரும் வரலட்சுமி விரதத்தன்று ஒரே தாயாரான வரலட்சுமியில் ஐக்கியம் அடைகின்றார்கள்.






வரலட்சுமி விரதம் கடைப்பிடிப்பதால் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கும், செல்வம் சேரும், கன்னிப் பெண்களுக்கு திருமணம் நிச்சயமாகும். குழந்தைகளுக்கு கல்வி ஞானம் கிட்டும், வரலட்சுமியின் அருளால் விரும்பிய நலன்கள் அனைத்தும் கிடைத்து வாழ்க்கை வளமாகும். எனவே இந்த புண்ணிய தினத்தில் முப்பெரும் தேவிகள் உறைந்துள்ள எல்லாம் வல்ல எங்கள் எம்பெருமாட்டியிடம் வருகை தந்து, ஏராளமான அடியார்கள் மனதார வழிபட்டு சென்றார்கள்.









உ
அம்பாள் துணை



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

*தெல்லிப்பழை (இலங்கை)*

## மகோற்சவ விஞ்ஞாபனம் - 2025

**25.08.2025 முதல் 07.09.2025 வரை**

"மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயகும் எளிற்பரையை வணங்குவோம்"

**துர்க்கை அம்பாள் அடியார்களே!**

நிகழும் விசுவாசுவசு வருடம் ஆவணி 9ம் நாள் (25.08.2025) திங்கட்கிழமை பூர்வ பட்சமும் உத்தர நட்சத்திரமும் கூடிய நன்நாளில் முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெற அம்பாளின் திருவருள் கிடைக்கப்பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து 12 தினங்கள் மகோற்சவம் நடைபெறும் . பூர்த்தி தினமாகிய ஆவணித்திருவோணத்தில் காலை 8.30 மணிக்கு துர்க்கா புஷ்கரணி தீர்த்த தடாகத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெறும். இந்த நாட்கள் விரதம் அனுஷ்டிப்பதற்கு உரிய நாட்களாகும் என்பதை அறியத் தருகின்றோம். துர்க்காதேவியின் அருட்பெரும் கருணையை முன்னிட்டு இம் மகோற்சவ காலங்களில் அடியார்கள் வருகை தந்து வழிபாடு செய்ய வேண்டுமென்று அன்பாக வேண்டுகின்றோம்

### மஹோற்சவகால பூசை நேர ஒழுங்குகள்

| காலைப்பூசை | | | மாலைப்பூசை | | |
|---|---|---|---|---|---|
| அதிகாலை | 5.30 மணி | திருவனந்தல்பூசை | பிற்பகல் | 3.00 மணி | சாயரட்சைப் பூசை |
| காலை | 7.00 மணி | ஸ்நபன அபிஷேகம் | பிற்பகல் | 4.00 மணி | ஸ்தம்ப பூசை |
| காலை | 8.00 மணி | காலை சந்திப்பூசை | பிற்பகல் | 5.00 மணி | வசந்த மண்டப பூசையும் திருவீதி உலாவும் |
| காலை | 8.30 மணி | ஸ்தம்ப பூசை | இரவு | 7.00 மணி | அர்த்தசாமப் பூசை |
| முற்பகல் | 9.30 மணி | வசந்தமண்டபபூசையும் திருவீதிஉலாவும் | | | |

### பிரதான உற்சவங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொடியேற்றம் | ஆவணி 9ம் நாள் | 25.08.2025 | திங்கட்கிழமை | முற்பாகல் | 10.00 மணி |
| திருமுறைத் திருவிழா | ஆவணி 11ம் நாள் | 27.08.2025 | புதன்கிழமை | மாலை | 05.00 மணி |
| முத்தேவியர் திருவிழா | ஆவணி 12ம் நாள் | 28.08.2025 | வியாழக்கிழமை | மாலை | 05.00 மணி |
| தங்கரதத் திருவிழா | ஆவணி 13ம் நாள் | 29.08.2025 | வெள்ளிக்கிழமை | மாலை | 05.30 மணி |
| திருமஞ்சத் திருவிழா | ஆவணி 14ம் நாள் | 30.08.2025 | சனிக்கிழமை | மாலை | 05.00 மணி |
| வேட்டைத் திருவிழா | ஆவணி 17ம் நாள் | 02.09.2025 | செவ்வாய்க்கிழமை | பிற்பகல் | 01.00 மணி |
| கைலாச வாகனத் திருவிழா | ஆவணி 17ம் நாள் | 02.09.2025 | செவ்வாய்க்கிழமை | மாலை | 05.00 மணி |
| பட்டுக்குடைத் திருவிழா | ஆவணி 18ம் நாள் | 03.09.2025 | புதன்கிழமை | காலை | 11.00 மணி |
| சப்பறத்திருவிழா | ஆவணி 18ம் நாள் | 03.09.2025 | புதன்கிழமை | மாலை | 04.00 மணி |
| தேர்த்திருவிழா | ஆவணி 19ம் நாள் | 04.09.2025 | வியாழக்கிழமை | காலை | 09.00 மணி |
| தீர்த்தத்திருவிழா | ஆவணி 20ம் நாள் | 05.09.2025 | வெள்ளிக்கிழமை | காலை | 08.20 மணி |
| கொடியிறக்கம் | ஆவணி 20ம் நாள் | 05.09.2025 | வெள்ளிக்கிழமை | மாலை | 06.00 மணி |
| பிராயசித்த அபிஷேகம் | ஆவணி 21ம் நாள் | 06.09.2025 | சனிக்கிழமை | காலை | 06.00 மணி |
| வைரவர் திருவிழா, பொங்கல் | ஆவணி 21ம் நாள் | 06.09.2025 | சனிக்கிழமை | மாலை | 03.00 மணி |

### முக்கிய அறிவித்தல்

கொடியேற்றம் , கொடியிறக்கம், பொது உபயமாக நடைபெறுவது வழக்கமாகையால் இவ்வுபயத்திற்கு அன்பளிப்பு செய்ய விரும்புவோர் நிதி அலுவலகத்தில் பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம் பணமாகவோ, பவுணாகவோ, அரிசி முதலான அன்னதானப் பொருட்களாகவோ, அல்லது பூசை உபகரணங்களாகவோ அன்பளிப்புச் செய்வோர் அனைவரும் நிதி அலுவகலத்தில் பதிவுசெய்து பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். கோயில் நிர்வாகம் தவிர்ந்த எவருக்கும் கோயில் பெயரில் அன்பளிப்பு பெற அனுமதி வழங்கப்படவில்லை. எல்லா அன்பளிப்புக்களும் கோயில் அலுவலகத்திலே செலுத்தப்பட வேண்டும், கடிதம் மூலமோ வங்கி மூலமே கோயிலுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கற்பூரச் சட்டி எழுத்தல், அடி அழித்தல், அங்கப்பிரதிட்சை பண்ணல் யாவும் வெளிவீதியில் நடைபெற வேண்டும் . திருவிழாக்காலங்களில் பொங்கிப் படைத்தல், மற்றும் நேர்த்திகள், திருமணம், தனிப்பட்ட அபிஷேகம் ஆகியவை இடம்பெறாது என்பதை அறியத்தருகின்றோம்.

பெண்களும், குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவு குறைத்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது.

கோயில் திருவிழா முடிந்ததும் அவரவர் தத்தம் இல்லங்களுக்கு சென்று விடுவது விரும்பத்தக்கது, இரவு நேரங்களில் கோயில் வீதிகளில் தங்குவதோ, பொழுது போக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

| தேவஸ்தான நடைமுறைக் கணக்குகள் | | ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை | |
|---|---|---|---|
| இலங்கை வங்கி, சுன்னாகம் | க/கு. இல. 07470940 | இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி | க/கு. இல. 0718488 |
| இலங்கை வங்கி, காங்கேசன்துறை | க/கு. இல. 07573273 | வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் | க/கு. இல. 1060012692 |
| இலங்கை வாங்கி, சுன்னாகம் | க/கு. இல. 77683985 (திருப்பணி க/கு) | வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் | க/கு. இல. C1107000214 |

தொலைபேசி :- 021 224 1909
மின்னஞ்சல் :- thurkaiammantemple@gmail.com
Facebook :- @tellidurga

சுபம்

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

Thurkkaa Mallakm (Thirumakal Aluththakam) - 0750109501